**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ குரோதி வருடம் மார்கழி திங்கள் 04ம் நாள்)

**இடைநிலை மனு எண்.01/2023,**

**இடைநிலை மனு எண்.02/2023**

**இடைநிலை மனு எண்.03/2023**

**in**

**அசல் வழக்கு எண்.177/2021**

1. ரவி (இறப்பு)
த/பெ முனுசாமி மூப்பர் ..... மனுதாரர் / வாதி
2. சியாமளா
க/பெ ரவி
3. சீதா
த/பெ ரவி
4. மணி
த/பெ ரவி .... மனுதாரர்கள்/ கட்சி சேர்க்க வேண்டிய நபர்கள்

/ எதிர் /

1. சம்பத்
த/பெ முனிசாமி மூப்பர்
2. விஜயகுமார்
க/பெ சம்பத்
3. பிரபு
த/பெ சம்பத் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

அனைத்து மனுக்களும் இறுதியாக, கடந்த 06.12.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து மனுக்களிலும், மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. ரஞ்சித்குமார், அவர்கள் ஆஜராகியும், அனைத்து மனுக்களிலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.சி.தேவக்குமார், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த அனைத்து மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக

பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**<u>பொதுவான உத்தரவு</u>**

01) அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள வாதி இறந்துள்ள காரணத்தினால், அவருடைய சட்டப்படியான வாரிசுகளான மனுதாரர்களை, அசல் வழக்கில் கட்சி சேர்ப்பதற்காக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>02) இ.ம.எண்.1/2023, இ.ம.எண்.2/2023 மற்றும் இ.ம.எண்.3/2023 மனுக்களுக்கான பிரமாணப் பத்திரங்களின் பொதுவான சுருக்கம்:-</u>**

1ம் மனுதாரரால் பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, கடந்த 14.01.2023ல் 1ம் மனுதாரர் ரவி இறந்துள்ளார். அவருக்கு 2 முதல் 4 மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். அசல் வழக்கிற்கு 2 முதல் 4 மனுதாரர்கள் அவசியமான தரப்பினர்கள் ஆகின்றனர்.

1ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளை அசல் வழக்கில் கட்சி சேர்க்க ஏற்பட்டுள்ள 220 நாள் காலதாமத்தை மன்னிக்க வேண்டுமென்றும், 2 முதல் 4 மனுதாரர்களை அசல் வழக்கில் கட்சி சேர்ப்பதற்காகவும், மனுதாரர்களால் தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>03) இ.ம.எண். 1/2023, இ.ம.எண்.2/2023, மற்றும் இ.ம.எண்.3/2023 மனுக்களுக்கான தனித்தனியாக எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் பொதுவான சுருக்கம்:-</u>**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை மனுதாரர்கள் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளனர். மனுக்களுக்கான தனித்தனியான பிரமாணப்

பத்திரங்களில் மனுப்பரிகாரங்களுக்காக மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியவை கிடையாது.

1ம் மனுதாரர் கடந்த 14.01.2023ல் இறந்துள்ளார் என்பது உண்மையாகும். அவருக்கு 2 முதல் 4 மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்பது உண்மை கிடையாது. 1ம் மனுதாரரின் சட்டப்படியான மனைவி பெயர் ஆனந்தி ஆகும். அவர்களுக்கு எந்த குழந்தைகளும் இல்லை.

2ம் மனுதாரரின் கணவர் பெயர் பரந்தாமன் என்பதாகும். அவர்கள் மூலமாக 3, 4 மனுதாரர்கள் பிறந்துள்ளனர். இந்நிலையில், தவறான நபர்களை வழக்கில் கட்சி சேர்க்கவேண்டுமென மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. காலதாமத்திற்கான காரணங்கள் மனுக்களில் கூறப்படவில்லை. ஆகையால், அடிப்படை முகாந்திரம் இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**04)** இம்மனுக்களை பொறுத்தவரையில் மனுதாரர்களுக்கு அனைத்து மனுக்களிலும், மனுப்பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா ? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காணவேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**05) பிரச்சனைக்குரிய தீர்வு**

அனைத்து மனுக்கள் தொடர்பான இந்நீதிமன்ற விசாரணையில், இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைகேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

1ம் மனுதாரர் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரங்களுக்காக எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை

தாக்கல் செய்யப்பட்டு, வழக்கில் எழுவினாக்கள் வனையப்படவேண்டிய நிலையில், 1ம் மனுதாரர் இறந்துள்ளதால், அவருடைய சட்டப்படியான வாரிசுகளை வழக்கில் கட்சி சேர்க்க வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள 1ம் மனுதாரர் கடந்த 14.01.2023ம் தேதி இறந்துள்ளார் என்றும், 2 முதல் 4 மனுதாரர்கள் அவருடைய சட்டப்படியான வாரிசுகள் என மனுக்களில் கூறப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் இறந்துள்ளது உண்மையென எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், இறந்துள்ள 1ம் மனுதாரருக்கு 2 முதல் 4 மனுதாரர்கள் உண்மையான சட்ட வாரிசுகள் கிடையாது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரரின் சட்டப்படியான மனைவி பெயர் ஆனந்தி என்றும், அவர்களுக்கு குழந்தைகள் இல்லையென்றும், எதிருரையில் கூறப்பட்டுள்ளது. 2ம் மனுதாரரின் உண்மையான கணவர் பெயர் பரந்தாமன் என்றும், அவர்கள் மூலமாக 3,4 மனுதாரர்கள் பிறந்துள்ளனர் என எதிர்வழக்காடப்பட்டுள்ளது.

இறந்துள்ள 1ம் மனுதாரரின் உண்மையான சட்டப்படியான வாரிசுகள் யார் என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, இறந்துள்ள 1ம் மனுதாரரின் வாரிசு சான்று நகல் எதுவும் இம்மனுக்களில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. 2ம் மனுதாரரின் உண்மையான கணவர் பெயர் பரந்தாமன் என்பதை காட்டுவதற்கும், 3,4 மனுதாரர்கள் அவர்களுடைய வாரிசுகள் என்பதை காட்டுவதற்கும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள 1 ம் மனுதாரர் இறந்துள்ள நிலையில், அவருடைய உண்மையான வாரிசுகள் தொடர்பான சாட்சி, சான்றாவணங்கள் எதனையும் இருதரப்பிலும் இம்மனுக்களில் முன்னிலைப்படுத்தாத நிலையில், இறந்துள்ள 1ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளின் உண்மைதன்மை குறித்து இருதரப்பிலும் அசல்வழக்கு விசாரணையில் தகுந்த முறையில் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர் என முடிவு செய்யப்பட்டு, இத்தருணத்தில் இம்மனுக்களை அனுமதிப்பபது நீதியின் நலனுக்கு உகந்தது என்றும், முடிவு செய்யப்பட்டு, அனைத்து மனுக்கள் தொடர்பான பிரச்சணைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**06 ) முடிவில்**, இ.ம.எண்.1/2023, இ.ம.எண்.2/2023 மற்றும் இ.ம.எண்.3/2023 ஆகிய மனுக்கள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டு, பொது உத்தரவிடப்படுகிறது. அனைத்து மனுக்களிலும் செலவுத்தொகை எதுவும் இல்லை.

இப்பொது உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/–B.ராஜா,
சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை

Sd/–B.ராஜா,
சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.